# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 22 செவ்வாய்க்கிழமை 07.05.2024 கதிர் 250







# விமான நிலையத்தில் விசா வழங்கல் பணிகளை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைத்து லஞ்சம் பெறப்பட்டுள்ளதா?

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

**கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசா வழங்கல் பணிகளை 'விஎஃப்எஸ்' எனும் இந்திய நிறுவனத்திடம் கையளித்தமையின் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு டொலர் வருமான இழப்பை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பிலும், இதன் மூலம் அதிகாரமிக்க சிலருக்கு இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையிட்டும் விசாரணைகளை நடத்துமாறு இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான மக்கள் சக்தி அமைப்பினால் இலஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

2▶



# வித்தியா கொலை வழக்கிலிருந்து விலகினார் நீதியரசர் துரைராஜா



யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சுவிஸ்குமார் உட்பட ஐந்து தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரிக்க பிரேத நீதியரசர் நியமித்த ஐவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வின் தலைவரான நீதியரசர் எஸ். துரைராஜா விசாரணையில் இருந்து விலகியுள்ளார்.

இந்த மேன்முறையீடுகள் நீதியரசர்களான எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய ஐந்து பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதியரசர் எஸ்.துரைராஜா, தான் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய காலத்தில் இந்த வழக்கின் விவகாரங்களை மேற்பார்வையிட்டதால் இந்த மேன்முறையீட்டு விசாரணையில் இருந்து விலகத் தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணை ஜூலை 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான மொழி பெயர்ப்புகள் உரிய முறையில் கிடைக்கப் பெறாத காரணத்தால் இந்த வழக்கின் விசாரணை சுமார் 6 வருடங்களாகத் தாமதமாகியுள்ளது என்று பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த நீதியரசர் எஸ். துரைராஜா, மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையால் இந்த நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, இந்த வழக்கு தொடர்பான மொழிபெயர்ப்பு பணிகள் ஏறக்குறைய நிறைவடைந்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

அதன்படி, மொழிபெயர்ப்புப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய உரிய மேன்முறையீட்டு மனுக்களை ஜூலை 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி யாழ். புங்குடுதீவு பகுதியில் 18 வயது பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுவிஸ்குமார் உள்ளிட்டவர்களுக்கு 2017ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தமக்குத் தண்டனை வழங்கிய விதம் சட்டத்துக்கு முரணானது எனத்தெரிவித்து பிரதிவாதிகள் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இதன்படி, தண்டனைகளில் இருந்து தம்மை விடுவித்து உத்தரவு பிறப்பிக்குமாறு பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அனைவரின் அனுமதியுடனேயே விசா வழங்கும் பணிகள் இந்திய நிறுவனத்திடம் வழங்கப்பட்டன

## அமைச்சர் டிரான் அலஸ் விளக்கமளிப்பு



அமைச்சரவையின் அங்கீகாரத்துடனேயே இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்க விஃஎப்எஸ் குளோபல் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதாகவும் நாடாளுமன்றம் மற்றும் எதிர்கட்சியினரும் இது தொடர்பில் தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இந்த புதிய முறையின் கீழ், இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு 2▶

# கொத்தலாவல மருத்துவ பீடம் பணத்திற்கு மருத்துவ பட்டங்களை வழங்குவதால் மருத்துவ கல்வித்துறை பாதிப்பை எதிர்கொள்ளும்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு



கொத்தலாவல மருத்துவ பீடத்தின் ஊடாக பணத்திற்கு மருத்துவப் பட்டங்களை வழங்குவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தினால் பாரிய பிரச்சினைகள் பல எழுந்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மருத்துவக்கல்வி தொடர்பாக கொள்கை ரீதியிலான முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய நிலையில், 2▶

# தனியார் கம்பனிகள் இருந்தால்தான் தோட்டக் காணிகள் பாதுகாக்கப்படும்

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



"தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் காரணம் காட்டி, தோட்டங்களை அரசிடம் கையளித்து விட்டுக் கம்பனிகளைப் போகச் சொல்ல வேண்டாம். எத்தனை பின்னடைவுகள், பிரச்சினைகள் இருந்தாலும், தனியார் 2▶

## கொத்தலாவல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு மாறாக மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தின் காரணமாக மருத்துவக் கல்வியின் தரம் சவாலுக்கு உட்பட்டிருப்பதாக தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவ பீடம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி, கொத்தலாவல மருத்துவ பீடத்திற்கு பணம் செலுத்தி முதன்முறையாக மருத்துவ பட்டம் பெறும் வாய்ப்பை உள்ளூர் மாணவர்களுக்கு வழங்கும் தீர்மானம் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், மருத்துவத்துறை நிபுணர்களின் கருத்தைக் கேட்காமல் இலங்கை மருத்துவக் கல்வி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் உட்பட மருத்துவர்களின் எதிர்காலத் தேவைகள் குறித்து எந்தவிதமான ஆய்வுகளும் மேற்கொள்ளாமல் தவறான முடிவுகளை எடுக்கும் நடைமுறைகள் இந்நாட்டில் தொடர்ந்தும் நிலவுவதாகவும் குறிப்பிட்டுள்ளதுடன், இத்தகைய தவறான தீர்மானங்களின் காரணமாக மருத்துவ கல்வித்துறை பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ரெம-23)

## அனைவரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மூலமே வீசாக்கள் வழங்கப்படுவதுடன், விஃஎப்எஸ் நிறுவனத்திற்கு வீசா வழங்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் இது குறித்து தெரிவிக்கையில் இந்த புதிய முறையினால் நாட்டுக்கு எவ்வித பாதகமும் இல்லை எனவும், புதிய தொழில்நுட்பத்துடன் 17 புதிய விசா வகைகளை நாட்டிற்கு எவ்வித செலவும் இன்றி நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக இது அமையும் எனவும் குறிப்பிட்டார்.

மேற்படி விஃஎப்எஸ் நிறுவனம் 151 நாடுகளில் சேவைகளை வழங்கிய அனுபவம் வாய்ந்த கட்டமைப்பைக் கொண்ட ஒரு நிறுவனம் என்பதுடன், பல காரணங்களின் அடிப்படையில் நாம் புதிய தொழிநுட்பத்திற்கு செல்ல வேண்டியுள்ளதால், அதற்கேற்ப அந்த நிறுவனத்தின் முன்மொழிவும் பரிசீலிக்கப்பட்டு, அதற்கென குழுவொன்றை அமைத்து அந்த குழுவின் ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னரே குறித்த நிறுவனத்தை தெரிவு செய்ததாகவும், இது தொடர்பாக இரண்டு தடவைகள் அமைச்சரவைக்கு பத்திரங்களை சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார். (ரெம-21)

## விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குடிவரவுத் திணைக்களமே 2012 ஆம் ஆண்டு முதல் ஒன்லைன் வீசா வசதிகளை வழங்கி வருகின்ற போதிலும், தற்போது குறித்த இந்திய நிறுவனம் இந்த பணிகளை பொறுப்பேற்ற 25 டொலர்களை மேலதிகமாக அறவீடு செய்தமையினால், அதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவதோடு, நாட்டிற்கு கிடைக்க வேண்டியே டொலர் வருமானத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், விசா வழங்கும் முறையினை இந்திய நிறுவனத்திற்கு வழங்கியதன் மூலம் அதிகாரமிக்க சிலருக்கு அதற்கான லஞ்சம் கொடுக்கப்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே சம்பந்தப்பட்ட நபர்கள் மீது விசாரணை நடத்தி தண்டிக்கப்பட வேண்டும் எனவும் முறைப்பாட்டில் மேலும் கோரப்பட்டுள்ளது.

ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார உட்பட இன்னும் சிலர் இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-22)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கம்பனிகளிடம் இருந்தால்தான் தோட்டக் காணிகள் பாதுகாக்கப்படும் என்பது எனது உறுதியான நிலைப்பாடு" - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே தின மேடையில் அறிவித்த சம்பளத் தொகையை அவரால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்றால், அதற்கான மாற்று நடவடிக்கையை அரச தலைவராக அவர் எடுக்க வேண்டும். வர்த்தமானி பிரகடனம் செய்த தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசில் உள்ள இ.தொ.கா. உணர்ச்சி வசப்பட்டு மேடையில் பொங்குவது, பட்டாசு வெடித்து பொங்கல் சோறு பொங்குவது ஆகிய சிறு விளையாட்டுகளை நிறுத்தி விட்டு நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். இது தொடர்பில் எமது ஒத்துழைப்பையும் கேட்டால் நாம் சாதகமாகப் பரிசீலிப்போம். ஆனால், மாற்று நடவடிக்கை என்று "தோட்டங்களை அரசிடம் கையளித்து விட்டு கம்பனிகள் போக வேண்டும்" என்ற கோஷத்தை முன்வைக்க வேண்டாம் என அரசில் உள்ள மலையக நண்பர்களுக்கு அன்புடன் சொல்கின்றேன்.

கம்பனி போய், காணிகளை அரசு பொறுப்பு ஏற்றால் அவை அவர்களது ஆதரவாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு விடும். இப்படித்தான் இன்று அரசிடம் உள்ள ஜனவசம, எல்கடுவ ஆகிய அரச கம்பனி காணிகள் கேட்பாரின்றி வழங்கப்பட்டு, அங்கே வாழ்ந்த நமது மக்கள் நடுத்தெருவில் இருக்கின்றார்கள்.

அப்படி நடந்தால் அது சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதை ஆகி விடும். தனியாரிடம் தோட்டங்கள் இருப்பதால்தான் காணிகள் கொஞ்சமாவது பாதுகாப்பாக இருக்கின்றன. ஆகவே, சித்திரம் வரைய முடியவில்லை என்பதற்காகச் சுவரை இடிக்க யோசனை கூற வேண்டாம். சம்பளக் கோரிக்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்க்கிறேன் என்று காணி உரிமையை அடியோடு அழித்து விட வேண்டாம்.

பெருந்தோட்டங்களில் வாழும் நமது மக்களின் பிரச்சினை தீர பெருந்தோட்ட துறையில் "சிஸ்டம் சேன்ச்" என்ற மீள் கட்டமைப்பைச் செய்ய வேண்டும். அதுதான் நாம் எப்போதும் சொல்லும் நிரந்தரத் தீர்வு. நாம் ஆட்சிக்கு வந்து காணி உரிமையை அடிப்படையாகக் கொண்டு, நமது மக்களை சிறு தோட்ட தொழில் முனைவோராக மாற்றுவோம். அதுவரை தோட்டக் காணிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை எழுதும் கலந்துரையாடலின்போது, தோட்டத் தொழிலாளரின் சம்பளத் தொகையாக அன்று ஷரூ. 1,000 இற்கு மாற்றாக ஷரூ. 1,500 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. "சம்பளத்தைப் பற்றி பேசுவோம். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ இதை விட பெரிய தொகையைக் கூறுவார். அது பற்றி எல்லோரும் பேசுவார்கள். ஆகவே, சம்பளத்தை விட, தோட்டத் துறையில் "சிஸ்டம் சேன்ச் பற்றி நாம் பேசுவோம்" என நான் கூறினேன்.

"இன்று தோட்டக் கம்பனிகளை விட குறைந்த அளவு நிலப்பரப்பைக் கொண்டுள்ள சிறு தோட்ட உடமையாளர்கள்தான், தேயிலை ஏற்றுமதி வருவாயில் அதிக வருமானத்தைப் பெற்றுத் தருகின்றார்கள்" என்ற புள்ளிவிபரத்தை நான் அங்கே எடுத்து வைத்தேன். அதன் பிறகு, தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உடைமையாளர்களாக மாற்றுவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட நாம் முடிவு செய்தோம். சஜித் பிரேமதாஸவும் உடன்பட்டார்.

சஜித் பிரேமதாஸவின் 2019 தேர்தல் விஞ்ஞானத்தில், தோட்டத் தொழிலாளிகளை, "மலையகத் தமிழ் விவசாயிகள்" எனப் பெயரிட்டு, "இந்த மக்கள் விவசாயிகளாக, நிலையான வருமானம் பெற்றுக்கொள்வதற்காக, தனியார், அரச பெருந்தோட்டங்கள் மீள் கட்டமைப்பு செய்யப்படும். இந்த மலையக விவசாயிகளிடமிருந்து விளை பொருட்களை விலைக்கு வாங்கி, தோட்ட நிறுவனங்களும், இந்த மலையக விவசாயிகளும் பங்காளர்களாகின்ற, தொழில் முறைமை உத்தரவாதம் செய்யப்படும்" என்று குறிப்பிடப்பட்டது.

சஜித் பிரேமதாஸவின் 2019 தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்றும் தேடி எடுத்துப் பார்த்தால் இந்த வாசகங்களை அங்கே காணலாம். இதன் தொடர்ச்சியாகவே சஜித் பிரேமதாஸ "தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உடைமையாளர்களாக மாற்றுவோம்" என்ற முற்போக்கான கருத்தை இன்று மீண்டும், மீண்டும் கூறி வருகின்றார். நாம் அவரை நம்புகின்றோம்.

ஆகவே, எங்கள் அரசு வரும் வரை இந்தத் தோட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் காரணம் காட்டி, தோட்டங்களை அரசிடம் கையளித்து விட்டுக் கம்பனிகளைப் போகச் சொல்ல வேண்டாம். எத்தனை பின்னடைவுகள், பிரச்சினைகள் இருந்தாலும், தனியார் கம்பனிகளிடம் இருந்தால்தான் தோட்டக் காணிகள் பாதுகாக்கப்படும் என்பது எனது உறுதியான நிலைப்பாடு." - என்றார். (அ)

# கிராம சேவகர் 3 ஆம் நிலை பயிற்சிகளுக்கான நியமனக் கடிதங்கள் நாளை வழங்கப்படவுள்ளன

கிராம சேவகர் 3 ஆம் நிலை பதவிக்கு தகுதி பெற்ற 1942 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நாளை (8) நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் 3 ஆம் நிலை கிராம சேவகர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான நேர்காணல் முடிவுகளின் அடிப்படையில் காலாண்டுப் பயிற்சிக்குத் தகுதி பெற்ற 1942 விண்ணப்பதாரர்களின் பட்டியலை பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு கடந்த 6 ஆம் திகதி அறிவித்ததாகவும், அதன் படி தகுதி பெற்ற அனைவருக்கும் நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

www.moha.gov.lk எனும் இராஜாங்க அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்தப் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். கிராம சேவகர்களுக்கான மேற்படி பரீட்சையானது 2023 டிசம்பர் 2 ஆம் திகதி பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்டிருந்தது.

மேற்படி மூன்று மாத பயிற்சிக்கு தகுதி பெற்ற போதிலும் அதற்கான அழைப்பு கடிதங்களை எவரேனும் பெறவில்லையாயின், அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-24)




# திருகோணமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினால் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வானது, திருகோணமலை மாவட்ட செயலகத்தில், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெற்றது.

இலங்கை சிறுவர் நிதியத்திற்கு ஜப்பான் சிறுவர் நிதியத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள், சிறுவர் நிதியத்தின் பங்காளரான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் குச்சவெளி, கோமரங்கடவெல, மொரவெவ பிரதேச செயலக பிரிவை சேர்ந்த அறுபது மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. அத்துடன், பாடசாலைக்கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழிற்பயிற்சிக்கான காசோலைகளும் மற்றும் சுயதொழிலுக்கான காசோலைகளும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரியரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்டச் செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மேலதிக மாவட்ட செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட செயலக ஊழியர்கள், மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், திருகோணமலை மற்றும் திருகோணமலை வடக்கு கல்வி வலய அதிகாரிகள் அதிபர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# கண்ணகி அம்பாள் வைகாசி திருக்குளிர்த்தி ஆலோசனைசபை - விஞ்ஞாபனமும் வெளியீடு

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசித்திங்கள் திருக்குளிர்த்திச்சடங்கு தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அதன்போது பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரிடமும் ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

அங்கு துறைசார்ந்த அதிகாரிகளின் கருத்துக்களும் பெறப்பட்டன.

ஆலய தர்மகத்தா பிரதம பொறியியலாளர் பரமலிங்கம் இராஜமோகன், அனைவரும் இணைந்து இப்பெரும் சடங்கை நடாத்த அழைப்பு விடுத்ததுடன் நன்றியுரையுமாற்றினார்.

இறுதியில் இவ்வருட திருக்குளிர்த்தி விஞ்ஞானம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊர்ப்பிரசித்தம் தொடர்பான பட்டய நிகழ்வு இடம்பெறும்.

சடங்குப் பெருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கடல் தீர்த்தம் எடுத்துவந்து திருக்கல்யாணக்கால் நடும் வைபத்துடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

இச்சடங்குப்பெருவிழாவானது தொடர்ந்து 8 தினங்கள் நடைபெற்று, 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்திப் பாடலுடன் நிறைவடையும்.

இரண்டாம் நாள் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக் காவியப் பாடலும் இடம்பெறும். தொடர்ந்து, புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை பிற்பகல் 1 மணிக்கு பூசையும் மாலை 7 மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியப் பாடலும் இடம்பெறும்.

20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வும் மாலை 3 மணிக்கு பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவமும் நடைபெறும்.

மறுநாள் (21) செவ்வாய் அதிகாலை திருக்குளிர்த்தி பாடப்பெறும். எட்டாம் சடங்கு 27ஆம் திகதி மாலை 7மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் கண்ணகி அம்மன் ஆலய வண்ணக்கர்கள், பரிபாலன சபையினர், பொலிஸ் உத்தியோகத்தர், சுகாதாரப் பரிசோதகர், காரைதீவுப் பிரதேசத்தில் இயங்குகின்ற அனைத்து திணைக்கள உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர், ஊடககர்கள், பொது அமைப்புக்கள், கழகங்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.



# ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான அமெரிக்க வீசாக்கள் வழங்கப்பட்டன

## வியாஸ்காந்தும் உள்ளடக்கம்!



அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள ஐசிசி ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்காக இலங்கை கிரிக்கெட் அணியின் 25 வீரர்கள் தங்களுடைய அமெரிக்க வீசாக்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான புகைப்படங்களை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தன்னுடைய உத்தியோகபூர்வ சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் புகைப்படங்களில் இலங்கை அணியின் அனுபவ வீரர் அஞ்சலோ மத்யூஸ் இல்லாவிட்டாலும், அவரும் வீசாவை பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை கிரிக்கெட் சபை ஐசிசி ரி-20 உலகக்கிண்ணத்துக்கான 15 பேர்கொண்ட குழாத்தை இதுவரை அறிவிக்கவில்லை. எனினும், வீசா பெற்றுள்ள 25 வீரர்களிலிருந்து இறுதிக் குழாம் பெயரிடப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐசிசி ரி-20 உலகக்கிண்ணத் தொடர் அடுத்த மாதம் முதலாம் திகதி ஐக்கிய அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகவுள்ளது.

வீசா பெற்றுக்கொண்ட இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் விபரம் -

வனிந்து ஹஸரங்க (தலைவர்), குசல் மெண்டிஸ், துனித் வெல்லாலகே, அகில தனஞ்சய, பானுக ராஜபக்ச, ஜெப்ரி வண்டர்சே, நுவான் துஷார, மஹீஷ் தீக்ஷன, தசுன் ஷானக, தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், சமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, குசல் பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல, விஜயகாந்த் வியாஸ்காந்த், சரித் அசலங்க, பினுர பெர்னான்டோ, அசித பெர்னான்டோ, டில்சான் மதுசங்க, பதும் நிஸங்க, மதீஷ பதிரண, சதீர சமரவிக்ரம, பிரமோத் மதுசான், அஞ்சலோ மத்யூஸ்.




## போதைப்பொருள் வர்த்தகத்தில் புதிய கடத்தல்காரர்கள் பலர் இணைந்துள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன!

பெருமளவிலான போதைப்பொருள் வர்த்தகத்தில் புதிய கடத்தல்காரர்கள் பலர் இணைந்துள்ளதாக பொலிஸ் புலனாய்வு அமைப்புகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. அண்மைக்கால நடவடிக்கைகளில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், போதைப்பொருள் கடத்தல் மூலம் பெருமளவு சொத்துக்களை ஈட்ட முடியும் என்பதாலும், இந்த மோசடியில் பல புதிய கடத்தல்காரர்கள் இணைந்துள்ளதாக புலனாய்வு அதிகாரிகள் தெரிவிதுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பல புதிய கடத்தல்காரர்களை கைது செய்வது இலகுவான காரியமல்ல எனவும் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். சமீபகாலமாக இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் குறித்து போதைப் பொருள் தடுப்புப் பிரிவிலோ, காவல் துறையிலோ எந்தவொரு தகவலும் பதிவுகளில் இல்லாததால், சோதனை நடவடிக்கைகளில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இதன்மூலம், பல புதிய வர்த்தகர்கள் சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பிலும், இந்நாட்டின் முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரர்களுடனும் இணைந்துள்ளனர். இந்த கடத்தல்காரர்களில் பெரும்பாலானோர் டுபாய் நாட்டில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இந்த கடத்தலில் ஈடுபட்டு வருவது தற்போது தெரியவந்துள்ளது.

அண்மைய நாட்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படை, போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் பொலிஸாரால் நடத்தப்பட்ட பாரியளவிலான போதைப்பொருள் சோதனைகளில் கைது செய்யப்பட்ட கடத்தல்காரர்களில் பெரும்பாலானவர்கள் புதிதாக இணைந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ரெம-22)

## ஆளுநர்களின் ஊடாக மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டு நடைபெறுகின்றன!

### தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் 'பெஃபரல்' பணிப்பாளர்



அரச அதிகாரம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் ஆளுனர்கள் ஊடாக மேற்கொள்ளும் அரசியல் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை சட்ட ரீதியில் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (பெஃபரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும், அந்த கலந்துரையாடலின் பின்னர் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், வாக்குப்பதிவு இரத்து செய்யப்படாத நிலையில், தேர்தலுக்கு முன்னைய சட்டங்கள் அமுலில் உள்ளதாகவே கொள்ளப்படும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதித் தேர்தலை ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் நடத்த வேண்டிய நிலையில், கிராம அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அலுவலகம் சுற்றறிக்கை விடுத்துள்ளதுடன், எதிர்வரும் ஜ/லை 31ஆம் திகதி அபிவிருத்தித் திட்டங்களை முடிக்குமாறு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-21)

## 'சிப்பரொக்ஸின்' தடுப்பூசி கொள்வனவில் போட்டி நிறுவனங்களை புறக்கணித்துள்ளமையினால் அதிக விலை செலுத்த வேண்டிய நிலை

### மருந்தாக்கல் ஒழுங்குமுறை அதிகார சபை வட்டாரங்கள் தெரிவிப்பு



330 மில்லியன் ஷரூபாவிற்கு கொள்வனவு செய்யக்கூடிய 'சிப்பரொக்ஸின்' என்ற சக்திவாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பு தடுப்பூசியின் 9 இலட்சம் குப்பிகளை கொள்வனவு செய்வதற்கு 1000 மில்லியன் ஷரூபாவிற்கும் அதிகமான விலைமனுக்களை சமர்ப்பித்துள்ள நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கொள்முதலுக்கான விலைமனு கோரலின் போது போட்டி நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்காததால், மூன்று முதல் நான்கு மடங்கு மதிப்பை செலுத்த வேண்டியுள்ளதாகவும், மருந்தாக்கல் ஒழுங்குமுறை அதிகாரசபை அதிகாரிகள் விலை குறைந்த நிறுவனங்களை பதிவு செய்வதில் காட்டும் அலட்சியத்தாலேயே இந்நிலை எழுந்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

'சிப்பரொக்ஸின்' தடுப்பூசி மருந்து குப்பியை வழக்கமாக வாங்குவதற்கு இருபத்தைந்து சத டொலர்களே செலவாகும், எனவும் ஆனால் இந்த ஒப்பந்தத்தின் காரணமாக ஒரு தடுப்பூசி மருந்து குப்பிக்கு கிட்டத்தட்ட ஐந்து டொலர்கள் விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மருந்தாக்கல் ஒழுங்குமுறை அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார செயலாளர் இந்த 'சிப்பரொகஸின்' பரிவர்த்தனை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லையெனில் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்வதுடன் குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் தொழிற் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஜி. சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-23)

# சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவாகிய மீராவோடை மாணவி கல்விச் சமூகத்தால் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றியீட்டி சர்வதேச போட்டிக்கு தெரிவான மட்டக்களப்பு மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவி எம்.எச்.அய்னிபதுல், பாடசாலைக் கல்விச் சமூகத்தால் பாராட்டி கௌரவித்த நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ.ஜே.மர்சூக் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றமீஸ், ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கே.பி.எஸ். ஹமீட் உட்பட கல்வி அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையிலிருந்து தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் திறமையை வெளிப்படுத்திய எம்.எச்.அய்னிபதுல், சர்வதேச மட்ட கணித ஒலிம்பியாட் போட்டிக்குக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# 40 வருட கல்விச் சேவையாற்றிய பணிப்பாளர் அமீர் ஓய்வு பெற்றார்



(வி.ரி.சகாதேவராஜா)

40 வருடங்கள் கல்விச் சேவையாற்றிய மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம்.அமீர் தனது 60 வது வயதில் ஓய்வு பெற்றுள்ளார். மருதமுனையைச் சேர்ந்த எஸ்.எம். எம்.அமீர், 1984 இல் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றார். பொருளியல் பாடத்தை மாணவர்கள் விரும்பி கற்க இவரிடம் செல்வதுண்டு.

இலங்கை கல்வி நிருவாக சேவைப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று தன்னை ஓர் கல்வி அதிகாரியாக தரமுயர்த்திக் கொண்டார்.

ஆசிரியராக, திட்டமிடல் மற்றும் மீளாய்வு பிரதிக் கல்விப்பணிப்பாளராக, அதிபராக கல்வித் துறையில் தன்னை அர்ப்பணித்த அவர், சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளரானார்.

பின்னர் மட்டக்களப்புமத்திகல்விவலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக இறுதி இரு வருடங்கள் இருந்து ஓய்வுபெற்றார்.

# ஒலிம்பியாட்டிற்கு தெரிவான மல்வத்தை மாணவிக்கு உதவி



(காரைதீவுச் செய்தியாளர்)

சம்மாந்துறை கல்வி வலயத்திலிருந்து இம்முறையும் தேசிய மட்ட ஒலிம்பியாட் (கணிதம் ) போட்டியில் தெரிவாகியுள்ள மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி சிவஷரூபன் ஜினோதிகாவிற்கு ஊக்குவிப்பு உதவி வழங்கி வைக்கப்பட்டது.

லண்டன் கற்பகப்பிள்ளையார் ஆலய சபையின் இலங்கைக்கான இணைப்பாளரும் இலங்கை அகிலன் பவுண்டேசனின் உதவிப்பணிப்பாளருமான கலாநிதி விஆர். மகேந்திரனிடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த ஊக்குவிப்பு உதவி நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்தியாவின் ஸ்ரீமத் பரசமய கோளறி நாதர் ஆதீன 39 ஆவது குரு மகா சன்னிதான பீடத் தலைவர் புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் அதனை மாணவிக்கு வழங்கி வைத்தார்.

அச்சமயம் அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன், சமூகசெயற்பாட்டாளர்களான முன்னாள்தவிசாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், தா. பிரதீபன் ஆகியோரும் சுவாமிகளின் இந்தியப் பிரதிநிதிகளும் மாணவியின் பெற்றோரும் கலந்து கொண்டார்கள்.

இம்முறை தெரிவான மற்றுமொரு மாணவி மதுஸ்காவிற்கும் இவ்வுதவி இவ்வாரம் வழங்கி வைக்கப்படும் என வீஆர் மகேந்திரன், பணிப்பாளர் சகாவிடம் உறுதியளித்தார்.



மாலைக்கதிர்
Maalaikkathir



# நல்லூர் பிரதேச சபையின் குப்பைக் கிடங்கு இணுவிலில் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம் இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையின் குப்பைக் கிடங்கினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை வெளிப்படுத்தும் முகமாகவும், அதனால் அதனைச் சூழவுள்ள கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டியும் போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த நான்கு, ஐந்து வருடங்களுக்கு மேலாக இணுவில் காரைக்கால் அம்மன் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள நல்லூர்ப் பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பைகளைக் கொட்டும் பகுதியில் மலை போல் குப்பைகளை குவிந்து, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குவிக்கப்படும் கழிவுகளினுள் மருத்துவக் கழிவுகள், கால்நடைகளின் கழிவுகள் உள்ளிட்டவற்றை தீயிட்டு எரிப்பதன் ஊடாக அயலிலுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாகவும் குறித்த குப்பைகளில் தீப் பரவல் ஏற்பட்டு சுற்றுச்சூழலில் மக்கள் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும், நேற்றைய தினமும் ஏற்பட்ட தீயினால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்து, அதனைக் கண்டித்து இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது அங்கு பணி புரிபவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு, வேறு பகுதிகளில் உள்ள பொதுக் குப்பைக் கழிவுகளையும் இங்கே போடுவதற்கு அனுமதி வழங்குவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்

எனவே, இது தொடர்பில் நல்லூர்ப் பிரதேச சபையினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என போராட்டத்தை முன்னெடுத்த மக்கள் வலியுறுத்தினர். (01)

# மல்லாகத்தில் இயங்கிய சட்டவிரோத கொல்களம் சுகாதார வைத்திய அதிகாரியினால் முற்றுகை



யாழ் மல்லாகம் பகுதியில் இயங்கிவந்த சட்டவிரோத கொல்களம் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியினால் முற்றுகையிடப்பட்ட நிலையில், அங்கிருந்து மீட்கப்பட்ட கால்நடைகளை பராமரிக்க நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது - மல்லாகம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கொல்களம் ஒன்று இயங்கி வருவதாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியான நந்தகுமாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்திற்கு பொதுச் சுகாதாரப் பரசோதர்கள் மற்றும் பொலிசாருடன் அவர் சென்றிருந்தார்.

அதன்போது, பசுமாடு ஒன்றினையும் கன்று ஒன்றனையும் அவர்கள் மீட்டுள்ளனர். இதேவேளை சட்டவிரோதமான முறையில் மாடுகளை வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் மாடுகளை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியவேளை குறித்த சட்டவிரோதமான கொல்களத்தினை நடாத்தி வந்தவர் சார்பில் சட்டத்தரணி பார்த்தீபன் முன்னிலையானார்.

மீட்கப்பட்ட கால்நடைகளை தெல்லிப்பழை அன்பு இல்லத்தில் பராமரிக்க நீதிவான் உத்தரவிட்டதோடு சந்தேகநபரை மன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை சுன்னாகம் பகுதியில் கொல்களத்தினை இயக்கிவரும் உரிமையாளரே சந்தேகநபர் என்றும் மல்லாகத்தில் வெட்டப்படுகின்ற மாடுகளை சுன்னாகத்தில் விற்பனை செய்வதாகவும் சுகாதார அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் பல மாடுகளின் கயிறுகளையும் கைப்பற்றிய அதிகாரிகள், முறையான நீர் ஆகாரமின்றிய நிலையிலேயே கால்நடைகளை மீட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.








## சுனிதா வில்லியம்ஸின் பயணம் ஒத்திவைப்பு!

சுனிதா வில்லியம்ஸின் விண்வெளிப் பயணம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (58), 3ஆவது முறையாக இன்று செவ்வாய்க்கிழமை விண்வெளிக்குச் செல்லவிருந்தார்.

விண்வெளி நிலையத்தில் 322 நாள்கள் தங்கியிருக்கும் திட்டத்திற்காக சுனிதா வில்லியம்ஸ் இன்று பயணம் செல்லவிருந்தார்.

அமெரிக்க நாட்டின் போயிங் நிறுவனம் 'ஸ்டார் லைனார்' என்ற விண்வெளிஓடத்தைஉருவாக்கியுள்ளது. அந்த ஓடம் சோதனை முறையில் முதல்முறையாக இன்று விண்ணில் செலுத்தப்படவிருந்தது.

புளோரிடா மாகாணத்தின் கப் கனாவெரல் ஏவுதளத்திலிருந்து ஏவப்படவிருந்த ஸ்டார்லைனரில் சுனிதா வில்லியம்சுடன் பட்ச் வில்மோர் என்ற விண்வெளி வீரரும் செல்லவிருந்தார்.

இந்த நிலையில், ஒக்சிஜன் குழாயில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக சுனிதா வில்லியம்ஸின் விண்வெளிப் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (04)



## அச்சுவேலி மகிழடி வைரவர் ஆலயத்தில் கௌரவிப்பு

அச்சுவேலி பஸ்நிலையத்திற்கு அண்மையில் உள்ள மகிழடி வைரவர் ஆலய அலங்கார உற்சவ நிறைவையொட்டி நேற்று (6) நடைபெற்ற சப்பரத்திருவிழாவின் போது கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க. ஓம்முருகையா சிவாச்சாரியார், மகோற்சவ குரு சிவஸ்ரீ பா.சோமசுந்தரக்குருக்கள், பைரவர் வழிபாட்டின் மகத்துவம் என்ற பொருளில் ஆன்மீக உரையாற்றிய செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் சப்பரத் திருவிழா உபயகாரராலும் ஆலயத் தொண்டர் சபையினராலும் பொன்னாடை அணிவித்தும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ: WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!